மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மணி 1 ★ பக்கங்கள் 8 23-8-59 விலை 13 காசுகள் ★ ஒலி 45

பெரியாரின் கொள்கையை பெரியாராலேயே அழிக்க முடியாது!

தி.மு.க. உள்ளவரை “திராவிட நாடு” கோரிக்கையும் மடியா

பகுத்தறிவுச் சிங்கமே! நீங்கள் பச்சோந்திகளோடு உறவாடுவது சரியா? !

கொண்ட கொள்கையை கண்ட கண்டபடி சிதைப்பது முறையா ?

தென்னகத்து மக்களால் திராவிடத் தந்தை என்றும், திராவிடத்தின் தனிப் பெருந் தலைவர் என்றும் அழைக்கப்பட்டு வந்த நமது மாபெரும் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களின் நிலையை நினைக்கும்போது, ‘தலைவிதி, தலைவிதி’ என்று மூட நம்பிக்கையுடையவர்கள் எதற்கெடுத்தாலும் கூறி வருகிறார்களே அந்தத் தலைவிதி இதுதானோ என்றுகூட ஒரு கணம் நினைக்க வேண்டி இருக்கிறது! ‘தமிழ் அரசியல் உலகம் வாழக்கூடாது’’ என்று எவனாவது சாபமிட்டு விட்டுச் சென்று விட்டானோ என்றுகூட இந்தப் பேதை நெஞ்சம் எண்ணிப் பார்க்கிறது! மறுகணம் ‘விதியாவது, சாபமாவது’ மனிதனுடைய கொழுப்பு என்று ஆறுதலடைய வேண்டி இருக்கிறது!

தமிழகத்துச் சரித்திரத்திலே யாருக்கும் கிடைக்காத இடம், எந்த சீமானுக்கும் பூமானுக்கும் கிடைக்காத இடம் நமது பெரியார் இராமசாமிக்குக் கிடைத்திருக்கிறது.

பெரியார் கட்டளையிட்டால் அந்தக் கட்டளையை நிறைவேற்ற கட்டிளங்காளைகள் இலட்சக் கணக்கில் திரண்டு வருவர்!

பெரியாரின் வெண்தாடி அசைந்தால் இந்த நாட்டின் உயிர் நாடியே அசையும்!

நெருப்பிலே விழச் சொன்னாலும், கடலிலே குதிக்கச் சொன்னாலும் தட்டிப் பேசாமல் நெருப்பிலே விழ, கடலிலே குதிக்க ஆயிரக்கணக்கில் அணிவகுத்து நிற்பர். “நான் முந்தி, நீ முந்தி” என்ற போட்டியும் இருக்கும்!

இப்படிப்பட்ட சக்தி படைத்த பெரியார்தான் ஆதித்தனாரோடு கொஞ்சுகிறார், குலாவுகிறார்! கொண்ட கொள்கைகளை விட்டு விட்டு காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறார். “காமராஜர் மிக நல்லவர்” என்று பேசுகிறார்! யானைக்கும் அடி சறுக்கும் என்று சொல்லுகிறார்களே அது இதுதானோ.

பெரியார் இராமசாமி, நமது மதிப்பிற்குரிய தந்தை இராமசாமி, ‘காங்கிரஸ் கட்சியை அழிப்பதே என வீர சபதம் புரிந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார்! தன்மான இயக்கம் கண்டார்! சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினார். திராவிடர் கழகம் அமைத்தார்—“திராவிட நாடு, திராவிடருக்கே” என்று முழக்கம் செய்தார்! வாலிபர்கள் திரண்டனர், இளைஞர்கள் ஓடோடி வந்து இலட்சிய கீதம் பாடினர்! ‘பெற்றால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு’ என்று நாடெங்கும் அறிவித்தார்! தென்னகமே கொந்தளித்தெழுந்தது ‘பெரியாரே! கட்டளையிடுங்கள், எத்தர்களை வீழ்த்துகிறோம்’ என்று போர் முழக்கம் கிளப்பினர்!

அந்தப் பெரியார் இராமசாமிதான் இன்று கூடாத நட்பால், தகாத உறவால் தன் கொள்கைகளை பெகுழி தோண்டிப் புதைக்க ஏற்பாடு செய்கிறார்!

எந்தப் பெரியார் ‘திராவிட நாடு கிடைக்காவிட்டால்

(8-ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 23—8—59 | ஒலி 45

யாருக்கு சுதந்திரம்

ஏன் கொண்டாட வேண்டும்?

இந்தியத் துணைக்கண்டம் ஆங்கிலேயனுடைய பிடியிலிருந்து விடுபட்டு சரியாக பன்னிரெண்டு ஆண்டுகள் முடிந்து பதின்மூன்றாவது ஆண்டை எட்டிப்பிடித்திருககிறது.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் நள்ளிரவு சரியாக பன்னிரெண்டு மணிக்கு வெள்ளைக்காரன் தனது ஆட்சிப் பொறுப்பை பண்டித ஜவகர்லால் நேருவிடம் ஒப்புவித்து விட்டு வெளியேறினான்! அந்த நாளை அதிகாரம் பெற்ற காங்கிரஸ் கட்சி மிக கோலாகலத்துடன் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது! இந்த ஆண்டும் அந்த விழா நாடெங்கும் சிறப்பாகவே கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள்!

இந்த சுதந்திர தின விழாவை எல்லாக் கட்சிகளும் கொண்டாடி இருக்கின்றன! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் வழக்கம் போல் இந்த ஆண்டும் சுதந்திர தினவிழாவைக் கொண்டாடவில்லை!

சென்னை நகர சபையில் கொண்டாடப்பட்ட சுதந்திர தின விழாவில் நமது மேயர் அ. பொ. அரசுவும், துணை மேயர் சிவசங்கரனும், மற்றும் நமது நகர சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை! "இது தேசத் துரோக நடவடிக்கை" என்று நமது முதலமைச்சர் கனம் காமராஜர் நம் மீது குற்றம் சாட்டி பேசி இருக்கிறார்! இப்படிப்பட்ட தேசத் துரோகிகளையா கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிப்பது, பொது மக்கள் ஓட்டுப் போடுவது என்றும் கேட்கிறார்!

நமது முதலமைச்சர் கனம் காமராஜர் அத்தோடு நிற்கவில்லை! "இது தி. மு. க.வின் குறுங்கு வழிக்கு எடுத்துக் காட்டு" என்றும் சொல்லி விட்டு—"இதற்கு வெளிப்படையாகக் காரணம் ஏதாவது சொல்ல வேண்டாம்?" என்றும் கேட்டிருக்கிறார்!

பண்டைய காலத்திலுள்ள மகாராஜக்கள் தான் அரண்மனையில் இருந்தபடியே மந்திரியைப் பார்த்து—"மந்திரி மாதம் மும்மாரி பொழிகிறதா" என்று கேட்பார்! "பெய்கிறது மகாராஜா பெய்கிறது" என்று மந்திரி பதில் சொல்லுவார்!

அரண்மனை சுகவாசத்தில் களிப்படைந்து கிடக்கும் மகாராஜாக்களுக்கு தான் நாட்டிலே மழை பெய்வது கூட தெரியாது! மந்திரிகளைக் கேட்டு தெரிந்து கொள்ளுவார்! இந்தக் காலத்தில் மக்கள் பிரதிநிதியாக அமர்ந்திருக்கும் அமைச்சர்களுக்கு கூடவா நாட்டின் நிலை புரியாது! நாட்டிலே உள்ள கட்சிகளின் கொள்கை தெரியாது!

"சென்னை நகர சபை மேயர் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளாததற்கு வெளிப்படையாகக் காரணம் கூற வேண்டாமா?" என்று முதலமைச்சர் கேட்டிருக்கிறார்! பதின்மூன்று ஆண்டுகளாக நாட்டிலே உள்ள எல்லாக்கட்சிகளும் சுதந்திர தின விழாவைக்கொண்டாடி வருகின்றன! இந்த பதின்மூன்று ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதுமில்லை—அதில் கலந்து கொள்வதுமில்லை இதற்கு அவ்வப்போது விளக்கமும் தந்து வந்திருக்கிறோம்! இப்போது அமைச்சர் புதிதாக விளக்கம் கேட்கக் காரணமென்ன என்பது தான் நமக்குப் புரியவில்லை!

இந்தியத் துணைக் கண்டத்தை நாங்கள் எப்போதுமே ஒரு நாடாகக் கருதியதில்லை! பல இன மக்கள் வாழும் ஒரு துணைக் கண்டமாகவே கருதிவருகிறோம்! இது தான் உண்மை நிலையும் கூட! எனவே இந்தியத் துணைக் கண்டம் மொத்தமாக ஒரு அந்நியனிடமிருந்து விடுதலை பெற்றதாகவே இந்த சுதந்திரத்தை நாங்கள் கருதி வருகிறோம்! ஆங்கிலேயனிடமிருந்து இந்தியாவிலுள்ள எல்லா இனங்களும் மொத்தமாக விடுதலை பெற்று ஒரு இனத்தவரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதை மற்றொரு இனம் எப்படி இதை சுதந்திரமாகக் கருதும்?

தென்னகத்திலுள்ள திராவிட இனம் முன்பு ஆங்கிலேய இனத்திடம் அடிமைப் பட்டுக் கிடந்தது! இப்போது அந்த அடிமை நீங்கி புது இனத்திடம்—அதாவது வட நாட்டு இனத்திடம் அடிமைப் பட்டுக் கிடக்கிறது! இது திராவிட இனத்திற்கு எப்படி சுதந்திரமாகும்?

புள்ளிமான் புலியிடமிருந்து தப்பினால் மட்டும் போதாது—அது நரியிடமிருந்து விடுபட வேண்டும்! அப்போது தான் புள்ளிமான் துள்ளி ஓட முடியும்! அதே போல் ஆங்கிலேயன் அடிமையிலிருந்து திராவிட இனம் விடுபட்டால் மட்டும் போதாது, அது வட நாட்டு இனத்திடமிருந்து விடுதலை பெற வேண்டும்! அப்போது தான் திராவிட இனம் சுதந்திரம் பெற்றதாகக் கருத முடியும்! திராவிடர்கள் வாழும் நாடு எந்த இனத்திற்கும், எந்த நாட்டிற்கும் அடிமைப்பட்டிராமல் தனித்து வாழும் நாள் தான் நமக்கு சுதந்திர நாளே தவிர—பழைய அடிமை நீங்கி புது அடிமையில் சிக்குண்ட நாளை நாம் சுதந்திர நாள் என்று கூறி விழாக் கொண்டாடி களிக்க முடியாது!

வெள்ளைக்காரன் வெளியேறி இந்தியத் துணைக்கண்டத்திற்கு விடுதலை வழங்கியதற்கு நாம் மகிழ்ச்சியடைகிறோம், பூரிப்பு அடைகிறோம்! ஆனால் அதே நேரத்தில் நமக்குப் பூட்டப்பட்டிருக்கும் புது அடிமை விலங்கை நினைத்துப் பார்க்கும் போது அந்த மகிழ்ச்சி அந்த பூரிப்பு எங்கேயோ பறந்து ஓடி ஒளிந்து கொண்டு விடுகிறது!

முதலமைச்சர் கனம் காமராஜர் இதை தேசத் துரோகம் என்று நம்மீது குற்றம் சாட்டுகிறார்! இது எப்படி தேசத் துரோகம் என்பதை முதலமைச்சர் விளக்கிக் கூற வேண்டும்!

1947-ம் ஆண்டுக்கு முன்பு ஆங்கில மொழி பேசும் வெள்ளைக்காரன் நம்மை அடக்கி ஆண்டு வந்தான்! இப்போது இந்தி மொழி பேசும் வடநாட்டான் அடிமை கொண்டு நம்மை ஆட்சி புரிந்து வருகிறான்! அப்படியானால் இது நமக்கு சுதந்திரமா?

1947-ம் ஆண்டுக்கு முன்பு லண்டன் பட்டினம் நமக்குத் தலை நகர்! இன்று டில்லிப் பட்டினம் தலை நகர்! இதற்குப் பெயரா சுதந்திரம்?

அன்று சர்ச்சில் துரை நமக்கு எஜமானர்! இன்று நேரு துரை நமக்கு எஜமானர்! இதுவா சுதந்திரம்?

அன்று ஆங்கிலம் பொது மொழி! இன்று இந்தி பொது மொழி! இதற்குப் பெயரா சுதந்திரம்?

அன்று நம்முடைய செல்வப் பொருள்கள் லண்டன் நகரை செழிக்க வைத்தது! இன்று டில்லி பட்டிணத்தை வாழ வைக்கிறது! இதற்குப் பெயரா சுதந்திரம்! இந்த நாளையா நாம் கொண்டாடிக் களிக்க வேண்டும்? முதலமைச்சர் காமராஜர் தெளிவு படுத்தட்டும்!

நாம் சுதந்திர தின விழா கொண்டாடவில்லையாம், அதனால் நாம் தேசத் துரோகிகளாம்! காமராஜர் கூறுகிறார்!

வெள்ளைக்காரன் கூட உங்களைப் பார்த்து அன்று தேசத் துரோகிகள் என்று தான் கூறினான்! ஆனால் இன்று நீங்கள் தேச பக்தர்கள் என்று போற்றப்படவில்லையா? எனவே காமராஜரோ. அல்லது கனம் நிதி அமைச்சரோ நம்மை தேசத் துரோகிகள் என்று குற்றம் சாட்டுவதால் நாம் தேசத் துரோகிகளாகி விடமாட்டோம்! திராவிடத்தின் விடுதலைக் கொடி கோட்டையில் பறக்கும் போது நீங்கள் தேசத் துரோகிகளாவும். நாங்கள் தேச பக்தர்களாகவும் மககளால் கருதப்படுவோம் என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

(7-ம் பக்கம் பார்க்க)

நகரசபையில் தி.மு.க. என்ன சாதித்தது?

கஜானாவைக் காலி செய்த காங்கிரஸ்காரர்கள் கேட்கின்றனர்!

ஊதாரித்தனமான செலவு! உங்களால் 20 இலட்சம் கடன்!

நாங்கள் கடனை அடைத்தோம்! நான்கு இலட்சம் மிச்சம் காட்டினோம்!

இதை விட என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என்ன செய்தீர்கள்?

சி. பி. சிற்றரசு விளக்கம்

[சென்னை நகர சபை மேயர் திரு. அ. பொ. அரசுவையும், துணை மேயர் திரு சிவசங் ரனையும் பாராட்டுவதற்காக சென்னை பிடாரியார் கோயில் தெருவில் கூட்டப்பட்ட கூட்டத்தில் சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு ஆற்றிய சொற்பொழிவு.]

இந்த வட்டாரத்திலே மேயருக்கும், துணை மேயருக்கும் பாராட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சென்ன நேரத்திலே எனது மனம் சிறிது சஞ்சல மடைந்தது காரணம் மேயரையும், துணை மேயரையும் பாராட்டுகலை நான் விரும்பாததால் அல்ல! இந்த வட்டத்தின் நகர சபை உறுப்பினர் திரு. ராஜமன்னார் இந்த வட்டத்திலிருப்பதுதான் காரணம். திரு. ராஜமன்னாரும் நானும் நெருங்கிய நண்பர்கள் அவர் என் வீட்டுப் பக்கமாக செல்லும் போது என்னை சந்தித்து ஒரு பத்து நிமிஷம் பேசி விட்டுப் போவார்! அவர் வீட்டுப் பக்கமாக நான் செல்லும்போது அவரைக்கண்டு ஒரு பத்து நிமிட நேரமாகிலும் பேசாமல் நான் போக மாட்டேன். அப்படிப்பட்ட எனது நண்பர் ராஜமன்னார் முப்பத்தி ஏழு காங்கிரஸ் பேடிகள் விரித்த சூழ்ச்சி வலையிலே விழுந்து விட்டாரே என்பது தான் எனக்கு உள்ளூர மன வருத்தம்! காங்கிரஸ்காரர்கள் மேயர் தேர்தலிலே நின்றால் தோல்வி யடைவது நிச்சயமென்பது தெரியும்! பத்திரிகைகளிலே காங்கிரஸ் தோல்வி யடைந்தது என்று வரக் கூடாது! பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் தோற்றார் என்று வந்தால் பரவாயில்லை என்பது தான் காங்கிரஸ் கட்சியினரின் எண்ணம்! இதற்குத் தான் காங்கிரஸ்காரர்கள் ராஜமன்னாரை மேயர் தேர்தலில நிற்கும்படி சொன்னார்கள்! முப்பத்தி ஏழு காங்கிரஸ் பேடிகள் விரித்த இப்படிப்பட்ட சூழ்ச்சி வலையிலே எனது நண்பர் ராஜமன்னார் சிக்கிக் கொண்டாரே என்பது எனக்கு பெரிய வருத்தம்! வலையிலே சிக்கிக்கொண்ட பிறகு அதனால் ஏற்படும் லாபமோ நஷ்டமோ எது வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் விடப்பட்டார் நண்பர் ராஜமன்னார்!

காங்கிரஸ்காரர்கள் கேட்கின்றனர், நகர சபையிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சாதித்து விட்டது என்று. நகர சபையிலே திராவிட முன்னேற்றக் கழகம் காலடி எடுத்து வைத்து மூன்று திங்களே ஆகின்றன! இதற்குள் திராவிட முன்னேற்றக்கழகம் என்ன சாதித்து விட்டது என்று கேட்கிறாய்! இது எப்படி இருக்கிறது என்றால் சென்னையிலே இருந்து ஒருவன் புறப்பட்டு பெங்களூர் செல்ல எக்ஸ்பிரஸில் ஏறுகிறான்! அரக்கோணத்திலே சந்திக்கும் ஒருவன் எப்படியப்பா பெங்களூர் போய்ச் சேரப்போகிறாய் என்று கேட்பது போலிருக்கிறது!



நகர சபையிலே நீ காலி கஜானாவை விட்டுவிட்டுப் போனாய்! காலி கஜானா என்றுகூட சொல்ல முடியாது! கடன் கஜானாவை விட்டு விட்டுப் போனாய்! நீ போகும் போது இருபது லட்ச ரூபாய் கடன் வைத்து விட்டுப் போனாய்! திராவிட முன்னேற்றக் கழகம் இந்த இருபது லட்ச ரூபாய் கடனை ஒழித்து மேற்கொண்டு நாலு லட்ச ரூபாய் வைத்திருக்கிறது! மூன்று மாத காலத்தில் இன்னும் என்ன செய்ய முடியும்?

நீ நினைக்கிறாய் ஐயோ நாம் செல்வச் சீமான்களுக்கெல்லாம் கொடுத்த வாக்குறுதி காற்றில் பறக்கிறதே என்று! ஐயோ! ராஜா முத்தையா செட்டியாருக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டதே என்று நினைக்கிறாய்! திராவிட முன்னேற்றக் கழகத்தான் அவர்கள் செலுத்தி வந்த வரியையெல்லம் உயர்த்தி விட்டார்களே! நாளைக்கு நாம் சென்று காந்தி ஜெயந்திக்குப் பணம் வசூலிக்க முடியாதே என்று நினைக்கிறாய்!

ஆஸ்திகம் ஆஸ்திகம் என்று சொல்கிறாய்! ஆஸ்திகத்தால் எங்களை ஒழித்து விடலாமென்று நினைக்கிறாய். அது முடியாதே! சரித்திரத்தைப் புரட்டிப்பார், இந்த உண்மை தெரியும்!

பிரான்ஸ் நாட்டு மன்னன் சார்லஸ் முடி பறிக்கப்பட்டது. அந்த முடியை மீட்டுத் தன் மன்னனின் தலையில் சூட்ட முடியுமென்று எண்ணினாள் ஜோன் ஆப் ஆர்க்! ஆடு மேய்த்திருந்த சிறுமி வாளேந்தி குதிரைமீதேறி போர் புரிந்தாள். மன்னன் முடியை மீட்டாள். சார்லஸ் தலையிலே சூட்டினாள்! மன்னனை மீண்டும் பிரான்ஸ் நாட்டு சிம்மாசனத்திலே அமரச் செய்தாள்! அப்படிச் செய்த அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த கதி என்ன? பாதிரிமார்கள் சொன்னார்கள் இவள் சூனியக்காரி. எங்களுக்குத் தெரியாத ரகசியம் இவளுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார்கள். ஆண்டவன் இட்ட கட்டளை என்றாள்.

ஆண்டவனை நீ பார்த்தாயா? கேள்வி!

அப்படிப் பார்த்தால் அவர் என்ன ரூபத்தில் வந்தார்? கேள்வி!

இரவில் வந்தாரா, பகலில் வந்தாரா? கேள்வி!

வந்தவர் என்ன சொன்னார்! கேள்வி!

இப்படியெல்லாம் விசாரிக்கப் பட்டாள் ஜோன் ஆப் ஆர்க். கடைசியிலே தீயில் பொசுக்கப் பட்டாள்!

சாக்ரடிஸிற்கு நேர்ந்த கதி என்ன? ஒரு கோப்பை விஷம் கொடுக்கப்பட்டது. ஆஸ்திகத்தால் எதையும் அழித்துவிட முடியாது என்று சரித்திரத்திலே இப்படிப்பட்ட சான்றுகள் உள்ளது! எங்களையா நீ அழித்து விடப் போகிறாய்?

திராவிட நாடு கேட்காதே என்று கூறுகிறாய். உன்னைப் பார்த்தா திராவிட நாடு கேட்கிறேன். நீ யார் என்னை திராவிட நாடு கேட்காதே என்று சொல்வதற்கு! நேருவைப் பார்த்தல்லவா திராவிட நாடு கேட்கிறேன்!

காந்தியாரின் நேரடி சிஷ்யன் என்று சொல்லிக் கொண்டு 1500 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய். உனக்குத் தெரியுமா காந்தி எப்போது எந்த ஊரிலே மேல் சட்டையை கிழித்தெறிந்துவிட்டு அன்று முதல சட்டை போடாமலிருந்தார் என்று!

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வந்தபோது கோயில உள்ளே செல்வதற்கு முன் தனது மேல் சட்டையைக் கழற்றி கோயிலுக்கு வெளியே வைத்து விட்டுச் சென்றார்! காந்தியார் கோயிலை விட்டு வரும்போது கோயிலுக்கு வெளியே ஏராளமான ஹரிஜனங்கள் உடம்பிலே சட்டையின்றி அவரை தரிசிப்பதற்காக நிற்பதைக் கண்டார். காந்தியார் அவர்களைப் பார்த்து உங்களுக்கெல்லாம் மேல் சட்டை இல்

(7-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி.எஸ்.இளங்கோ

அத்தியாயம்.1.

"வாழ்க திராவிட நாடு!"
"வீழ்க அடிமை வாழ்வு!"
"ஒழிக வடவராதிக்கம்!"

இந்த முழக் கொலியோடு மிகப் பிரமாண்டமான ஊர்வலமொன்று சோழ புரத்து வீதிவழியே சென்று கொண்டிருந்தது!

மீசை அரும்பாத கட்டிளங் காளைகள் பட்டாளத்து சிப்பாய்களைப் போல் கைகளிலே இருவண்ணக் கொடிகள் ஏந்தி வரிசைவரிசையாக அணிவகுத்து வெற்றி நகை புரிந்த வண்ணம் வீர நடை போட்டுக் கொண்டிருந்தனர்! பட்டு மேனி படைத்த தமிழ் மறத்திகள் வீரப்பண்பாடி மறவர் படைக்கு மேலும் வீரத்தை ஊட்டிச் சென்று கொண்டிருந்தனர்! பட்டாளத்து தளபதியைப் போல் வீரபாண்டியன் வெள்ளைக் குதிரை மீது அமர்ந்து முன்னே சென்று கொண்டிருந்தான்!

வழி நெடுகத் தோரணங்கள்!

வரவேற்பு வளைவுகள்!

"மக்கள் தலைவா! நீ வாழ்க! நீடூழி வாழ்க!" என்ற வாழ்த்துரைகள்!

"வீரபாண்டியா வெல்க! உன் இலட்சியம் வெல்க!" என்ற வீர உரைகள்!

ஊரெங்கும் மக்கள் கடலின் உற்சாகமான வரவேற்பு!

மக்கள் தந்த இந்த உற்சாகமான வரவேற்பு "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்ற உறுதியை அளித்தது!

வீரபாண்டியனுடைய உள்ளம் உற்சாகத்தால் துள்ளி விளையாடியது! அவனது உதட்டிலே ஒரு புன்னகை ரேகைப் படர்ந்தது! அவனது கண்களிலே வீரப்பார்வை ஒளி கூட்டிப் பிரகாசித்தது! அவனது முகம் வெற்றிக் களிப்பில் மூழ்கி நர்த்தனமாடியது! அவனது தோள்கள் விம்மின! கரத்திலே இருந்த கொடி உயர்ந்தது! தன்னையறியாமலேயே அவனுக்கோர் உற்சாகம், ஆனந்தம், பெரு மகிழ்ச்சி! "வாழ்க திராவிட நாடு! வாழ்க திராவிட நாடு" என்று இருமுறை உரத்த குரலில் சிங்கம் போல் கர்ஜித்தான்! பின்னே நின்ற வீரப் படையினர் எதிரொலித்தனர்! வானமே அதிர்ந்தது! படையும் சோழபுரத்து எல்லையைக் கடந்து கொண்டிருந்தது!

'போகாதீர்கள்! போகாதீர்கள்! ஆபத்து! பெரும் ஆபத்து" என்ற குரல் எங்கிருந்தோ ஒலியாய் பறந்தோடி வந்து பாண்டியனுடைய செவியில் சரண் புகுந்தது!

"வேலழகா! என்ன இது"!

"பேடிகளுடைய கூக்குரல்! நாடிதளர்ந்தவர்களுடைய நப்பாசை! பயப்படாதே பாண்டியா! போ! குதிரையை வேகமாகச் செலுத்து!"

"இல்லை வேலழகா! உண்மையைப் புரிந்து கொள்ளாமல் நாம் உளரக்கூடாது!"

"போகாதீர்கள்! போகாதீர்கள்! ஆபத்து, பெரும் ஆபத்து!" மீண்டும் ஒலித்தது!

"வேலழகா! கேட்டாயா?"

"கேட்டேன் பாண்டியா! கேட்டேன்! குரல் கூட பெண் குரலாய் இருககிறது!"

"ஆம்! யோசிக்க வேண்டிய விஷயம்! கொஞ்சம்நில்லுங்கள்!"

ஒரு பெண் இரைக்க, இரைக்க ஓடி வருகிறாள்! பெரு மூச்சு வாங்குகிறது! போகாதீர்கள்! போகாதீர்கள்! பெரும் ஆபத்து! என்று பாண்டியனிடம் சோக ரேகைபடந்த முகத்தோடு கூறுகிறாள்!

"நீங்கள் யார்?"

"நான் ஒரு பெண்!"

"அது தெரிகிறது அம்மா! நீங்கள் யார்? எந்த ஊர்? என்ன பேர்?"

"தளபதி பாண்டியருக்கு என்னைப் பற்றித் தெரிந்து கொள்வதல்ல முக்கியம். உங்களுக்குள்ள ஆபத்தைப் பற்றி தான் நீங்கள் அறிய வேண்டும்.

"என்னுடைய பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"அக்கறை கொண்டுள்ளவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வது மனித இயல்பு தானே?"

"அக்கறையா? என்மீதா? என்ன உளருகிறாய்?"

"உளரவில்லை! உண்மையைச் சொன்னேன்!"

"பாண்டியா! வஞ்சகத்தின் உருவில் நம்மை மாய்க்க வந்த பேய் இவள்—பெண்ணல்ல!" என்று வேலழகன் குறுக்கிட்டான்!

"வேலழகா! குறுக்கிடாதே!" என்று பாண்டியன் கடிந்து கொண்டு உண்மையை ஆராயத் தொடங்கினான்.

"ஐயா! எதைப்பற்றியும் என்னைக் கேட்காதீர்கள். உங்களைக் கைது செய்ய போலீசார் விரைந்து வந்து கொண்டிருக்கின்றனர். திரும்பிப்போங்கள்.' என்றாள் அவள்.

'திரும்பிப்போவதா? முன் வைத்தகாலை பின் வைக்கமாட்டான் தமிழன். வாழ்விழந்த நாடு வாழ்வு பெறும் வரை, வளமிழந்த மக்கள் சமுதாயம் வளமோடு வாழ வகை செய்யும் வரை இந்தப் பாண்டியன் திரும்ப மாட்டான். என் கரத்திலே பறந்தாடுகின்ற இந்த இரு வண்ணக் கொடி டில்லி செங்கோட்டையில் பட்டொளி வீசப் பறக்க விட்டு—திராவிடத்தை அடிமை கொண்டு வாழும் வடவர்களைத் தட்டிக் கேட்டு திராவிடத்தைப் பெறும் வரை எங்கள் பணி ஓயாது."டில்லி செல்வோம். செங்கோட்டையை முற்றுகையிடுவோம். திராவிடத்தைப் பெறுவோம், வீடு திரும்புவோம்." என்று உணர்ச்சிததும்ப பேசினான்.

"வேலழகா! இம் புறப்படு! வெற்றி அல்லது வீரமரணம் புறப்படு." என்றான் பாண்டியன். படையும் வாழ்த்தொலியோடு புறப்பட்டது ஒரு பத்து நிமிடத்திற்கெல்லாம் போலீசார் பாண்டியனுடைய படையை வளைத்துக் கொண்டு விட்டனர்.

"யார் நீங்கள்?" போலீஸ் அதிகாரி அருமை நாயகம் உறுமினார்.

"இந்த நாட்டுக்குடி மக்கள்! தெரிய வில்லையா?" என்று ஆவேசம் வந்தவனைப் போல் கூறினான்-பாண்டியன்.

"கிண்டல் செய்யாதே! கலைந்து செல்லுங்கள்."

"வெற்றிக் கொடியை நாட்டி விட்டு கலைந்து செல்லுகிறோம்."

"அதிகப் பிரசங்கி! கையிலிருப்பது என்ன தெரியுமா?"

"தெரியும்! அதிகார வர்க்கத்தின் ஆருயிர்த்தோழன். சர்வாதிகாரியின் ஆத்ம நண்பன்."

"ஏய்! அடுக்கு மொழி வேண்டாம். அது உன் ஆவியைப் போக்கும்"

"என் ஆவியைப்பற்றி நீ கவலைப்படாதே! உன் ஆவியைப் பத்திரப்படுத்திக் கொள்!"

"கலைந்து போகிறீர்களா? இல்லையா?"

"முடியாது."

"ஒரு தரம்-கலைந்து போகிறீர்களா? இல்லையா?"

"முடியாது!"

"இரண்டுதரம்-கலைந்து போகிறீர்களா? இல்லையா?"

"முடியாது! முடியாது."

மூன்று தரம்—கலைந்து போகிறீர்களா? இல்லையா?'

"முடியாது, முடியாது. முடியாது!"

"போர் எயிட் செவன், செவன் எயிட் போர், த்ரி போர் எயிட் மார்ச் ஆன்"

டுமீல், டுமீல், டுமீல், துப்பாக்கி நெருப்பைக் கக்கின குண்டுகள் வீரர்கள் மீது பாய்ந்தன. பிணங்கள் மலைபோல் அடுக்கப்பட்டன. பாண்டியன், வேலழகன், முத்தழகன் போன்ற பலபேர் கைது செய்யப்பட்டனர்.

அத்தியாயம்-2

கிழக்கில் உதய சூரியனாய் உதித்து மேற்குப் பள்ளத்தாக்கில் போய் வீழ்ந்து கொண்டிருந்தான் காலைக் கதிரவன்! வையத்து ஒளி விளக்கு அணைந்தது! வானமும் இருண்டது!

பாண்டியன், வேலழகன், முத்தழகன் இந்த மூவரும் சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருந்தார்கள்! சிறைச் சாலையை நோக்கி ஒரு ஒளி வந்து கொண்டிருந்தது! "அருமை நாயகம் வருகிறான்— இன்று அவனை ஒரு கை பார்த்து விட வேண்டும்" என்று வேலழகன் கூறுகிறான்! "பைத்தியக்காரா—நாமும் காந்தி சீடர்களின் வேலையை செய்வதா? அகிம்சை, அகிம்சை என்று கூறிக்கொண்டு போலீசாரை தாக்கினார்களே அந்தத் தொழிலை நாமும் செய்வதா" என்று அறிவுரை வழங்கினான் பாண்டியன்!

"பாண்டியா! அகிம்சை அகிம்சை என்று சொல்லிக் கொண்டிருந்தால் இந்தியத் துணைக் கண்டம் விடுதலையடைந்திருக்குமா? வெள்ளைக்காரன் தான் இந்த நாட்டை விட்டு வெளியேறி இருப்பானா?"

"வேலழகா! நீ எத்தனை ஆண்டு காலமாக அரசியல் வாழ்வில் ஈடுபட்டு வந்திருக்கிறாய்?"

"ஏன் பாண்டியா? எனக்கு அரசியல் அனுபவம் போதாது என்று கூறுகிறாயா?"

"இல்லை வேலழகா! உனக்கு அரசியலே தெரியாது என்று தான் கூறுகிறேன்."

"என்ன பாண்டியா இப்படிக் கூறுகிறாய்? நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றிருக்கிறேன், மும்முனைப் போராட்டத்தில் ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்றிருக்கிறேன், நேருவுக்குக் கருப்புக் கொடி பிடித்துச் சிறைச்சாலையின் கொடுமைகளை அனுபவித்திருக்கிறேன்! எனக்கா அரசியல் தெரியவில்லை என்கிறாய்?"

"சிறைச்சாலைக்கு சென்று திரும்பினால் அரசியல் தெரிந்து விட்டது என்று அர்த்தமா?"

"பாண்டியா! என்ன சொல்லுகிறாய்?"

"வெள்ளைக்காரன் பலம் பொருந்தியவனா? நாம் பலம் பொருந்தியவர்களா?"

"இதிலென்ன சந்தேகம்? வெள்ளைக்காரன்தான் பலமுள்ளவன்!"

"அப்படி என்றால் காங்கிரஸ்காரர்களின் காலித்தனத்தால் வெள்ளைக்காரன் வெளியேறி இருக்க முடியாதல்லவா?"

"முடியாதுதான்!"

"வேலழகா! வெள்ளைக்காரன் வெளியேறியது அவனுக்கிருந்த பொருளாதார நெருக்கடியே தவிர காங்கிரஸ்காரர்களின் காலித்தனங்களால் அல்ல என்பதை புரிந்து கொண்டாயா?"

"புரிந்து கொண்டேன் பாண்டியா?"

சிறைச் சாலையிலிருந்த கடிகாரம் மணி பன்னிரெண்டை அடித்தது! இவர்களுடைய சிந்தனையும் வேறு பக்கம் திரும்பியது!

பாண்டியன் மட்டும் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு ஏதோ யோசித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்!

விளக்கொளி விரைந்து சிறைச்சாலையை நோக்கி வந்து கொண்டிருந்தது! ஆம், சிறைச்சாலைக்கே அது வந்து விட்டது! முக்காடு போட்டிருந்த அந்த உருவம் பாண்டியன் பக்கமாக வந்து நின்றது! பாண்டியனுக்கு ஒன்றுமே புரியவில்லை! வீர நெஞ்சமுடையவன் தான்! என்றாலும் விவேக மற்றவர்களிடம் சிக்கிக் கொண்டு விட்டோமே என்ற அச்சத்தால் பயந்தான்!

"தளபதியாரே!" முக்காடு போட்ட உருவம் குரல் கொடுத்தது! பாண்டியனுக்கு கொஞ்சம் திகிலும் ஏற்பட்டது!

"பயப்படாதே!" என்று கூறிக் கொண்டே அந்த உருவம் தன் முக்காடை எடுத்தது! இருவரும் ஒரு கணம் திகைத்தார்கள்!

"என்னைத் தெரிகிறதா?" என்றாள் அந்தப் பெண்!

பாண்டியனோ தலை கவிழ்ந்து நின்றான்!

"தளபதியாரே! நிமிர்ந்து பாரும்! நான் யாரென்று புரிகிறதா?"

"புரிகிறது"! சோகத்தோடு கூறினான் பாண்டியன்!

"என பேச்சைக் கேட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?"

"எந்த நிலை? எனக்கு என்ன நிலை வந்து விட்டது!" என்று சற்று ஆத்திரத்தோடு கூறினான்!

"ஆத்திரப்படாதீர்கள்! ஆத்திரத்தால் அழிந்தவர்கள் பலருண்டு!"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கூறுகிறேன்"

"விளக்கமாகச் சொல்லுங்கள்!" "நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு வருகிறேன்! அதே இடத்தில் என்னை சந்திக்கவும்!"

"எதற்காக?"

"உங்களை விடுதலை செய்வதற்காக வருகிறேன்!"

"நீயா? என்னை விடுதலை செய்வதற்கா?"

"ஏன் தளபதியாரே சிரிக்கிறீர்கள்! கட்டாயம் உம்மை விடுவிப்பேன்!"

"நீ என்ன சிறைச் சாலையின் அதிகாரியா? அல்லது சிறைச் சாலை அதிகாரியின் மகளா?"

"நாளை வந்து யோசனை சொல்லுகிறேன்! நீ தப்பி ஓடி விட வேண்டும்!"

"தப்பி ஓடுவதா?"

"ஆமாம்! தப்பி ஓடத்தான் வேண்டும்! நாளை இரவு பன்னிரெண்டு மணிக்கு தயாராக இரு!

(தொடரும்)

புதுச்சேரியில் தி. க. ஜெயபேரிகை

காமராஜர் தப்பிப் பிழைத்தார்!

புதுவை மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 21 இடங்களையும, மற்றக் கட்சியினர் 18 இடங்களையும் பெற்றிருக்கின்றனர்! அதாவது மூன்று இடங்கள் அதிகமாகப் பெற்று நிகர மெஜாரிட்டியை அடைந்திருக்கின்றனர்!

காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த இந்த வெற்றி உண்மையிலேயே காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வெற்றியல்ல பெரியாருக்குக் கிடைத்த வெற்றி, திராவிடர் கழகத்தினருக்குக் கிடைத்த வெற்றி, என்று புதுச்சேரி வட்டாரத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது!

புதுச்சேரி தேர்தலில் காங்கிரஸ் தொண்டர்கள் பாடுபட்டதை விட திராவிடர் கழகத் தொண்டர்கள் நூறு பங்கு அதிகமாகப் பாடுபட்டு காங்கிரஸ் கட்சிக்கு வெற்றியைத் தேடித தந்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது!

திராவிடர் கழகத் தொண்டர்கள் இந்தத் தேர்தலில் இறங்கி வேலை செய்யாவிட்டால் காங்கிரஸ் கட்சிககு ஒரு பத்து பன்னிரெண்டு இடங்கள் கூட கிடைக்காது என்றும், காங்கிரஸ் மந்திரி சபை அமைகக முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் என்றும், —புதுச்சேரியிலும் ஒரு கேரளம் நடந்திருககும் என்றும் கூறப்படுகிறது!

"காங்கிரசை ஒழிப்பதே தங்கள் இலட்சியம்" என்று கூறிக் கொள்ளும் திராவிடர் கழகத்தினரும், பெரியாரும்தான் காங்கிரஸ்கட்சியை வளர்த்து தமிழகத்திலே வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களின் ஆட்சியை நிலை நாட்டி வருகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது!

"எது எப்படி இருந்தபோதிலும் பெரியார் ஒரு நாளைக்கு காங்கிரஸ் கட்சியை குழி தோண்டிப் புதைக்காமல் விடப்போவதில்லை! அப்போது இந்த நாட்டில் திராவிடம்மலரத்தான் போகிறது" என்று சில திராவிடர்கழகப் பிரமுகர்கள் பேசி மன ஆறுதலைப்பெறுகின்றனராம்!

சில நடு நிலை வாதிகள்—"என்ன இருந்தாலும் பெரியார் இப்படி மோசமாக நடந்து கொள்ளக் கூடாது—தள்ளாத வயதில்ஏன் இப்படிக் கேடுகளை செய்து வருகிறார்" என்று மனமுடைந்து பேசுகிறார்களாம்!

எனவே புதுச்சேரியில் காமராஜர் வெற்றி பெற்று விட்டார் என்று சொல்லுவதை விட பெரியார் வெற்றி பெற்றிருக்கிறார், திராவிடர் கழகம் ஜெயபேரிகை கொட்டி இருக்கிறது என்று சொல்லுவதே உண்மையாகும்!

திராவிடர் கழகத்தின் பெரு உதவியாலும், பெரியாரின் ஒத்துழைப்பாலும் வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சி எப்படி நடந்து கொள்ளப் போகிறது, என்னென்ன நன்மைகளை செய்யப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

ஆண்டு தோறும் ஆகஸ்டு வருகிறது! அதனால் நாம் கண்ட பலன்தான் என்ன?

வெள்ளைக்காரன் போனான்! அவன் செய்த கொடுமைகள் போயிற்றே!

ரயில் வேண்டும், கப்பல் வேண்டும், தந்தி வேண்டும்!

ஆனால் ஆங்கிலம் மட்டுமே வேண்டாம்!

1947ம் ஆண்டு, ஆகஸ்ட்டு திங்கள் 15-ம் நாள் நள்ளிரவு வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டு வெளியேறினான்! அது முதல் இதுவரை பாரதத்தில் பிறந்தவர்கள் தான் இந்த நாட்டை ஆட்சி புரிந்து வருகிறார்கள்!

காங்கிரஸ்காரர்கள் தொடர்ந்தாற்போல் 12 ஆண்டுகளாக பதவிபீடத்தில் அமர்ந்து நாட்டின் கோலை கையில் பிடித்து ஆட்சி செய்து வருகிறார்கள்! ஆட்சி செய்து வருகிறார்கள் என்பதைவிட கையிலே கோலை வைத்துக்கொண்டு இந்த நாட்டு மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டு வருகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்!

வெள்ளைக்காரன் வேறு இனத்தான், வெள்ளைக்காரன் வேற்று மொழி பேசும் அந்நியன் என்று மட்டும் கூறி வெள்ளையனை விரட்டியடிக்கவில்லை!

“வெள்ளைக்காரனுக்கு மட்டும்தான் கவர்னர் வேலை தரப்படுகிறது, வைசிராய் வேலை கொடுக்கப்படுகிறது, ஜட்ஜ் உத்தியோகம் அளிக்கப்படுகிறது! நம்மவர்களுக்கு, இந்தியர்களுக்கு அப்பெரும் பதவிகளில் ஒன்றுகூட அளிப்பதில்லை!” என்று மக்களிடம் இனிப்பான வார்த்தையைக் கூறியே வெள்ளைக்காரனை விரட்ட ஆதரவைத் தேடினர்! ஆனால் இன்றைய நிலை என்ன? காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் யோசித்தும் பார்க்க வேண்டும்!

“வெள்ளைக்கார கவர்னர்களுக்கு பத்து இலட்சம், பதினைந்து இலட்சம் என்று சம்பளம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது! இது நீதியா? முறையா?” என்று பிரச்சாரம் செய்தே மக்களுடைய உதவியைப் பெற்றீர்கள்! ஆனால் இன்றைய நிலை என்ன? காங்கிரஸ் கட்சியில் கவர்னர்களுக்கு என்ன சம்பளம்? பத்து இலட்சம், பதினைந்து இலட்சம் என்று கொட்டிக் கொடுப்பது இப்போது மட்டும் நேர்மையாகுமா? நீதியாகுமா?

“வெள்ளைக்காரன் இந்த நாட்டில் உள்ள மூலப் பொருள்களையெல்லாம், தன் நாட்டிற்கு கொண்டு சென்று அதை உபயோகப்படுத்தும் பொருளாக்கி நம் நாட்டிலேயே விற்பனை செய்கிறான்! இது அடுக்குமா? இந்த அநீதி ஆகுமா?” என்று சொல்லித்தானே மக்களை தியாகம் புரிய வைத்தீர்கள்? இப்போதுள்ள நிலை என்ன? இந்திய துணைக் கண்டம் முழுதும் சமநிலையில் தொழில் வளம் பெருகி இருக்கிறதா? தமிழகத்தில் ஒரு பெரும் தொழிற்சாலைகளை காட்டுங்கள் பார்க்கலாம்!

“வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கை ஏதுக்கடா” என்று மக்களை தூண்டிவிட்டு விரட்டினீர்கள்! இப்போது மட்டும் வானம் பொழியவில்லையா? அதனால் பூமி விளைவதில்லையா? இப்போது மட்டும் ஏன்? கிஸ்தி வசூலிக்கப்படுகிறது?

“வெள்ளைக்காரன் நாட்டை ஆள்வதால் தான் இந்த நாட்டில் பஞ்சம் தாண்டவமாடுகிறது, பசி பசி என்று மக்கள் கதறுகிறார்கள! வெள்ளையனை ஓட்டுங்கள்! வெள்ளைக்காரனைத் துரத்தியடியுங்கள்! எல்லாம் கிடைக்கும்’ என்று சொல்லித்தானே வெள்ளையனை விரட்டினீர்கள்!

இன்று பஞ்சம் நீங்கிற்றா? பசி ஒழிந்ததா? பட்டினிப் பட்டாளங்களின் தொகை குறைந்ததா?

முன்பு படி அரிசி நாலணா!

இப்போது படி அரிசி ஒரு ரூபாய் ஆறணா!

முன்பு நல்லெண்ணெய் விலை சேர் ஒன்றுக்கு இரண்டணா! இப்போது? கணக்கில் அடங்காவிலை? நாளுக்கு நாள் விஷம்போல் ஏறும் நிலை ஏன்?

“வெள்ளைக்காரனால் இந்த நாடு சுடுகாடாய்ப்போய்விட்டது என்று கூறினீர்கள்! இன்று மட்டும் என்ன வாழ்கிறது! முன்னிலும் கேடு கெட்ட சுடுகாடாய் ஆகிவிட்டதே!

தினம், தினம் எங்களை— “தேசத்துரோகிகள், வெள்ளைக்காரனின் காலைக் கழுவிக்குடித்த அடிமைகள்” என்று கூறுவதைப்போல் இன்னும் அழுத்தம் திருத்தமாகக் கூறினாலும் சரி” வெள்ளைக்காரன் இந்த நாட்டிற்கு செய்த நன்மைகளில் இலட்சத்தில் ஒரு பங்காவது நீ செய்திருக்கிறாயா?

வெள்ளைக்காரன்தான் இந்த நாட்டு மக்களுக்கு விஞ்ஞான மனப்பான்மையை உண்டாக்கினான்! அதற்கு முன்பு விஞ்ஞான அறிவு உனக்கு ஏதேனும் உண்டா?

வெள்ளைக்காரன்தான் இந்த நாட்டை ஒரே நாடாக்கித் தந்தான்! அதற்கு முன்பு ஏக பாரதமுண்டா?

வெள்ளைக்காரன்தான் இந்த நாட்டில் ரயிலை ஓடச்செய்தான், விமானத்தைப்பறக்கவிட்டான், கப்பலை கடலில் மிதக்கவிட்டான!

வெள்ளைக்காரன் இல்லாவிட்டால் நீ டெல்லிக்கு எத்தனை மாதங்கள் கட்டை வண்டியில் ஏறிக்கொண்டுபோய் நேரு பெருமகனாரின் காலில் பாத பூஜை செய்வாய்!

வெள்ளைக்காரன் இல்லாவிட்டால் தபால் நிலையம் ஏது? தந்தி ஏது? டெலிபோன் ஏது?

வெள்ளைக்காரன் இந்த நாட்டிற்கு வந்து நல்லறிவை புகட்டும். ஆங்கில மொழியைப் பரப்பாவிட்டால் நேருவின் அந்தஸ்துதான் எப்படி உயர்ந்திருக்கும்? உலகமெங்கு சுற்றி பிரமாதமாய் வாயளந்து மதிப்பை அடைவதுதான் எங்ஙனம்?

இந்திய நாட்டிற்கே அரசியலை கற்றுக் கொடுத்தவன், ஆளும் முறையை சொல்லிக் கொடுத்தவன் வெள்ளைக்காரன்தானே!

நல்ல அறிவு புகட்டும் ஆங்கில மொழியை அழிக்க வேண்டும் என்கிறாய்! ஒழிக்க வேண்டுமென்கிறாய்? காரணம் அது வெள்ளைக்காரனுடைய மொழி என்று சொல்கிறாய்? வெள்ளைக்காரனுடைய ரயில் இருக்கலாம், விமானம் இருக்கலாம், தந்தி இருக்கலாம், டெலிபோன் இருக்கலாம், ரேடியோ இருக்கலாம், அவனுடைய பணத்தில் இயங்கி வரும் கம்பெனிகள் இருக்கலாம், வெள்ளைக்காரனுடைய மொழிதானா இருக்கக் கூடாது!

ஆங்கிலம் ஒழிந்தால் இந்த நாடு பஞ்சபாண்டவர் ஆண்டதாகச் சொல்லப்படும் அந்த அநாகரீக காலத்திற்குதான் திரும்பிச் செல்லும்! ஆளுக்கு ஒரு பாரதமும், ராமாயணமும், பகவத் கீதையையும் வைத்துக் கொண்டு பஜனை செய்து ஒரு

8-ம் பக்கம் பார்க்க

நாம் தமிழருக்கு நாமம், பட்டை நாமம்!

“நாம் தமிழர்” படை புறப்படுகிறது—பட எரிப்புப் போராட்டத்தில் குதிக்கிறது என்றெல்லாம் நாள் தவறாமல் கொட்டை எழுத்தில் தன் சொந்தப் பத்திரிகையில் வெளியிட்டு வந்த ஆதித்தனாரின் உண்மை நிலை என்ன என்பதை அவர் நடத்திய “நாம் தமிழர்” மாநாடு எடுத்து விளக்கிவிட்டது!

பெரியார் மட்டும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்றால் மேஜையும், நாற்காலிகளும், மைக்கும் தான் பட எரிப்புப் போராட்டத்தில் குதிக்க முன்வந்திருக்குமாம்! “நாம் தமிழர்’ என்று சொல்லிக் கொண்டு வந்தவர் மாபெரும் கூட்டத்தில் ஆதித்தனார் ஒருவர்தானும் அவர் தன்னையே ஒரு ஆயிரம் பேர் என்று நினைத்துக் கொண்டாராம்! எனவே இதை ஒரு மாபெரும் மாநாடு என்று கூறலாம் அல்லவா?

பெரியார் கலந்து கொண்டும் கூட ஒரு இருநூறுபேர்கள் கூட விரவில்லையாம்! ‘ஐயோ நாம் தமிழர்களே!” என்று போனவர்கள், வந்தவர்கள் எல்லோரும் கேலி பேசினார்களாம்!

பெரியாருக்குமட்டும் உள்ளூர மெத்த சந்தோஷமாம்! “தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டு கட்சி ஆரம்பிக்கும் பயல்களுக்கு இந்தக் கதிதான் வரும்” என்று மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டதாக ஒரு மனோதத்துவ சாஸ்திரி கூறுகிறார்!

கூடுவிட்டு கூடு பாய்ந்து எங்கும் தலைமைப் பதவி கிடைக்காத காரணத்தால் சொந்தக் கட்சிக்கு தலைவரான ஆதித்தனுக்கு எங்கே தலைமைப் பதவி பறி போய்விடுமோ என்று அச்சத்தால் கலங்கி வாடி படுத்த படுக்கையாக இருப்பதாகவும் கேள்வி!

ஒரு இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் தினத் தந்தி ஆசிரியருக்கு ஒரு ஆள் கூட கிடைக்கவில்லை என்றால் அதிசயம் தானே!

“இதில் என்ன அதிசயம் இருக்கிறது” என்று ஒரு தினத் தந்தி வாசகன் கூறினான்! “தினத் தந்தியைப் படிப்பது பருவ மங்கைக்காகவும், மின்னல் மோகினிக்காகவும் தானே தவிர இந்த ஆதித்தனாருக்காக அல்ல என்று கூறினான்! அதுவும் உண்மைதானே என்று வாயை மூடிக் கொண்டோம்! மொத்தத்தில் சொன்னால் ஆதித்தனாருக்கு பட்டை நாமம் சாத்தப்பட்டிருக்கிறது!

திட்டிப் பேசுவது யார்? உங்கள் "அனுமந்த" நாயகியா? நாங்களா?

3-ம் பக்கம் தொடர்ச்சி

லையா என்று கேட்டார் இல்லை! என்றார்கள். வீட்டில் கூட சட்டை கிடையாதா? இல்லை. உங்கள் குழந்தைகளுக்குக் கூட சட்டை கிடையாதா? கிடையாது. உங்கள் வீட்டுப் பெண்களுக்கு உண்டா? கிடையாது. புடவையின் ஒரு முனையால் அவர்கள் தங்கள் உடலை மறைத்துக் கொள்வார்கள். உடனே காந்தியார் இந்த நாட்டிலே இவ்வளவு ஏழை மக்கள் சட்டையின்றி வெய்யிலிலும் குளிரிலும் வாடுகின்றபோது எனக்கு மட்டும் சட்டை எதற்கு என்று சொல்லி தன் மேல் சட்டையை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார். இந்த சம்பவம் காங்கிரஸ்காரர்களிலேயே அநேகருக்குத் தெரியாது!

சமீபத்திலே இந்த வட்டாரத்திலே பொது மக்களிடம் போலீஸார் சற்று கடுமையாக நடந்து வருவதாக கேள்விப் ட்டேன்! இதற்கு போலீஸ்காரர்களை நோவதில் பிரயோஜனமில்லை. அம்பு என்ன செய்யும்? அம்பை நோவதில் பிரயோஜனமில்லை. அம்பை ஏவினவனைத்தான் நோக வேண்டும். நாலு பேர் தையற் கடையில் உட்கார்ந்து இருந்தால் ஏன் தையற் கடையில் உட்கார்ந்திருக்கே வா போலீசுக்கு என்று அழைக்கப்படுகிறார்கள். சைக்கிள் கடையில் நாலு பேர் உட்கார்ந்திருந்தால் ஏன் சைக்கிள் கடையில் உட்கார்ந்திருக்கீங்க ஊம் எழுந்து நடங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு என்று அழைக்கப்படுகிறார்கள். திண்ணையிலே நாலு பேர் உட்கார்ந்திருந்தால் திண்ணையிலே ஏன் உட்கார்ந்திருக்கீங்க? திண்ணையிலே உட்காராமல் மண்ணிலேயா உட்காருவாங்க. எங்களுக்கு போலீஸ்காரர்களைத் தெரியும், இன்ஸ்பெக்டரைத் தெரியும். அவர்களுக்கு மேலேயுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களையும் தெரியும். நாளைக்கு நாங்களே வந்து பதவியிலே உட்காருவோம். அதனால் இந்த உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுகிறவர்கள் நாங்கள் அல்ல!

நீ போலீஸ்காரர்களை என்ன நிலையில் வைத்திருக்கிறாய்? அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள், குடியிருப்பதற்கு வசதியான வீடுகளா? போலீஸ்காரருக்கு குழந்தை இருந்தால் அவர்கள் வீட்டிலே அந்தக் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு ஆட்ட முடியுமா? முடியாதே. உறியில் அல்லவா குழந்தைகளை உட்கார வைக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்காக நீ கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகள், வீடுகளா என்று கேட்கிறேன்! போலீஸ்காரர்கள் வீட்டிற்கு இரண்டு விருந்தாளிகள் வந்துவிட்டால் அவர்கள் தங்க இடமிருக்காது! நான் இலங்கைக்கு சென்றபோது அந்த ஊரை சுற்றி வருகையில் ஒரு பகுதியிலே அழகான வீடுகள் கட்டப்பட்டிருந்தன. இந்த வீடுகள் எல்லாம் போலீஸ்காரர்கள் வசிப்பதற்காக சர்க்காரால் இனாமாக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்! இந்த வீடுகளா போலீஸார் வசிப்பதற்கு கட்டிக் கொடுக்கப்பட்டவை என்று கேட்டேன். ஆம் என்றனர்! வீடுகள் என்றால் சாதாரண வீடுகள் அல்ல, மச்சு வீடுகள்! மச்சு வீடுகள் என்றால் உங்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன்! மச்சு வீடுகள் அதுதான் மாடி வீடு. போலீஸ்காரனுக்கு எட்டு மணி நேர டியூட்டி என்று பெயர்! ஆனால் அவன் எப்ப கூப்பிட்டாலும் வரணும்! டியூட்டி முடிச்சுட்டுப் போய் வீட்டிலே தன் குழந்தையோடு கொஞ்சிக் கொண்டு இருப்பான். அவனுக்கு அழைப்பு வந்துவிடும். "ஏய் டூ நாட் சிக்ஸ் (206) வாய்யா இன்ஸ்பெக்டர் கூப்பிடுறாரு." என்னய்யா ஏன்? என்ன சமாச்சாரம்! மந்திரி போறாராம், புறப்பட்டு வா!',

ஏன் மந்திரி போனா என்ன? அவர் என்ன சினிமா ஸ்டாரா? அவரை ஜனங்க கடிச்சுத் தின்னுடுவாங்களா? மந்திரி போறாருன்னா என்னா? போலீஸ்காரங்க வழி நெடுக வரிசையா நின்னாத்தான் அவரு போவாரா என்று நான் கேட்கிறேன்! இந்த அழகிலே இருக்கு நீ போலீஸை படுத்துறபாடு! (இந்த நேரத்தில் கூட்டத்தின் ஒரு மூலையில் ஏதோ சில எதிர்கட்சி "அன்பர்கள்" குழப்பமும், கூச்சலும் உண்டாக்கினார்கள். சிற்றரசு கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு குழப்பம் விளைவித்த கும்பலுக்கு நல்ல பாடம் கற்பிக்கும் வகையில் சாட்டையடி கொடுப்பது போல பேசினார்.)

"இந்த வட்டத்திலே சென்ற சில திங்களாக அங்கங்கே சில கழகங்கள் தோன்றி திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்து விடலாமென்று நினைத்து வருகிறார்கள். இது கனவாக முடியுமேயன்றி ஒருக்காலும் அவர்களால் தி.மு.க.வை அழிக்க முடியாது. எந்தக் கட்சிக்கும் எதிர்ப்பிருந்தால்தான் நல்லது! நஞ்சை நிலத்தில்தான் கள்ளிகளும் காளான்களும் தோன்றும்! ரோஜாச் செடியில் எப்படி முட்கள் இருக்கின்றனவோ, சமுத்திரத்தில் எப்படி அலைகள் இருக்கின்றனவோ, அதுபோலத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ள இடத்தில்தான் இப்படிப்பட்ட வேறு கழகங்களும் இருக்கும்,

கூட்டத்திலே குழப்பம் விளைவிக்க விரும்பியவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். உங்கள் கட்சியைத் தாக்கிப் பேசுவது உங்களுக்கு மனதை உறுத்தலாம். கட்சியை கட்சி தாக்கிப் பேசுவது அரசியலிலே காணப்படும் சாதாரண விஷயம். நாங்கள் தாக்குகிறோமென்றால் கண்ணியமான முறையிலேயே தாக்குகிறோம். எப்போதும் முறை தவறி தாக்குவதே கிடையாது.

உங்கள் அனுமந்தநாயகி ஒரு பெண். எப்போதும் பெண்கள் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டியவர்கள்! அப்படிப்பட்ட பெண் இனத்தைச் சேர்ந்த அனுமந்த நாயகி எவ்வளவு கீழ்த்தரமான வகையில் எங்கள் கட்சியைத் தாக்கி வருவதை நீங்கள் அறிந்திருக்கலாம். அனுமந்தநாயகிஅம்மையார் சொல்கிறார், அண்ணாதுரைக்கு ஆண்மை இல்லையென்று! அண்ணாதுரைக்கு ஆண்மை இல்லாவிட்டால் அனுமந்த நாயகிக்கு என்ன நஷ்டம்? அனுமந்தநாயகிக்கு அண்ணாதுரையின் ஆண்மையைப் பற்றி என்ன கவலை? இப்படி ஒரு பெண் எங்கள் கட்சியை முறைதவறி மிகவும் கீழ்த்தரமான முறையில் தாக்கிப் பேசும்போது நாங்கள் தாக்கிப் பேசுவது தவறா? நான் மட்டரகமாக தாக்கிப் பேச வேண்டுமென்று ஆராய்ந்து தாக்கிப் பேசினால், நீ ஐந்து நாளைக்கு கஞ்சி குடிக்கமாட்டாயே. நாங்கள் தாக்கிப் பேசுவதில் ஏதாவது பிழை இருந்தால் மேடைக்கு வா என்னுடைய தவறுகளை எடுத்துச் சொல், அப்படி மேடைக்கு வர தைரியமில்லையானால் துண்டு காகிதத்தில் கேள்வி எழுதி அனுப்பு பதில் தருகிறேன். இதை விட்டு நீ ஒரு மூலையில் கூச்சலும் குழப்பமும் விளைவிப்பதால் நாங்கள் பயந்து விடுவோம் என்று எண்ணாதே? நான் சொல்கிறேன் மரியாதையாக நடந்து கொள் என்று வீணாக உன் உடம்பை புண்ணாக்கிக்கொள்ளாதே நல்லபடியேவீடு போய்சேர்வதைப்பார்.(இப்படிப் பேசியவுடன் எங்கோ எழுந்த கூச்சலும் குழப்பமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது).

அடுத்தபடியாக கூட்டத்தினர் எழுதிக் கேட்ட கேள்விகளுக்கு பின்வருமாறு பதிலளித்தார்)

கேள்வி: ஜீவரத்தினம் மகனுக்கு கார்ப்பரேஷனிலே வேலைகொடுக்கப்பட்டதாமே?

பதில்: ஜீவரத்தினம் கவுன்சிலர் ஆவதற்கு முன்பிருந்தே அவரது மகன் கார்ப்பரேஷனிலே வேலை செய்கிறாரே ஜீவரத்தினம் ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால் அவர் மகன் அறிவாளியாக இருக்கக்கூடாது என்றிருக்கிறதா? இல்லை. ஜீவரத்தினம் கவுன்சிலராக இருப்பதற்கும் அவர் மகன் கார்ப்பரேஷனிலே வேலையிலிருப்பதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையே!

கேள்வி: தி.மு.க. தீவிர வார ஏடு என்று போட்டுக் கொண்டே நம் கழகத்தைத் தாக்கி வருகின்றதே அது சரியா?

பதில். வீடு நம்முடையதுதான். ஆனாலும் அதிலும் சாக்கடையும் கக்கூஸும் இருக்கத்தான் இருக்கின்றன. நம்முடைய வீடுதானே என்று கக்கூஸை சமையல் வீட்டுக்குப் பக்கத்தில் கட்டிக் கொள்வோமா? சாக்கடையைக் கட்ட வேண்டிய இடத்தில்தான் கட்டுவோம்! கக்கூஸை கட்ட வேண்டிய இடத்தில்தான் கக்கூஸை கட்டுவோம்! அதுபோலத்தான் இந்த ஏட்டையும் நாம் சட்டை செய்யாமல் அதை எந்த இடத்திற்கு ஒதுக்கித்தள்ள வேண்டுமோ அந்த இடத்தில் ஒதுக்கித் தள்ளி இருக்கிறோம்!

கேள்வி: கழகத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் சூதாடிகள் என்று செல்கின்றனரே? அப்படியானால் சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சூதாடிகள் தானா?

பதில: பதில் கேள்வியிலேயே இருக்கிறதே. கழகங்கள் பல இருக்கின்றன. அவற்றில் இருப்பவர்கள் எல்லாம் சூதாடிகள் என்று சொல்வது பொருந்துமா? தமிழரசுக் கழகம் கூடத்தான் இருக்கிறது. அதற்கு கொள்கை இல்லை, திட்டமில்லை, லட்சியமொதுவுமில்லை. அதிலே உள்ள தொண்டர்கள் மிகமிகக் குறைவு ஆனாலும் அதிலிருப்பவர்களை சூதாடிகள் என்று சொல்ல முடியுமா?

இந்த விளக்க வுரையுடன் சிற்றரசுவின் கூட்டம் முடிந்தது!

3-ம் பக்கத்தின் தொடர்ச்சி

சுதந்திர தின விழாவைக் கொண்டாடி மகிழாத தி.மு.க.வுக்கு ஓட்டளிக்கக் கூடாது என்று மக்களுக்கு காமராஜர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்! பொறுத்திருந்து பார்ப்போம்! 1962 விரைந்து வந்து கொண்டிருக்கிறது! அப்போது யார் தேசத் துரோகிகள் என்பது விளங்கி விடும்!

எனவே முதலமைச்சர் நம்மை தேசத் துரோகிகள் என்றாலும், காட்டிக்கொடுக்கும் கயவர்கள்என்றாலும் நாம் கவலைப்பட மாட்டோம்! அதற்காக பயந்து கொண்டு— நமக்கு புது அடிமைப் பட்டயம் சூட்டிய நாளை சுதந்திர நாள் என்றும் கொண்டாட மாட்டோம்!

என்று திராவிடம் விடுதலை பெறுகிறதோ அன்று தான் எங்களுக்கு சுதந்திர நாள்! அந்த நாளை உலகம் வியக்கும் முறையில் கொண்டாடுவோம் என்பதை முதலமைச்சர் உணர வேண்டுகிறோம்!

Registered as a Newspaper in CEYLON
Regd. No·M. 7074 MALAIMANI Phone No: 83285

அரசியல்' 'பல்டி''யை மறைக்கத்தான் பெரியாரின்

விதண்டாவாதம்-ஏமாற்றுப் பேச்சு!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வாழ முடியாது'' என்று சொன்னாரோ அதே பெரியார் திராவிட நாடு தற்கொலைக்கு ஒப்பானது என்று கூறுகிறார்!

எந்தப் பெரியார் காங்கிரஸ் கட்சியை ஒழிப்பேன் என்று கூறி வெளியேறினாரோ அதே பெரியார் காங்கிரஸ் வாழ வேண்டுமென்று கூறுகிறார்! காங்கிரஸ் கட்சியை வாழ வைக்க அரும்பணி புரிந்து வருகிறார்! தமிழகமே! உன் தலைவிதி இதுதானா? தென்னகமே! நீ செய்த பாக்கியம் இதுதானோ?

பெரியார் இராமசாமி சென்னையில் நடைபெற்ற 'நாம் தமிழர்' மாநாட்டில் 'திராவிட நாடு கேட்பது தற்கொலைக்கு ஒப்பானது' என்று கூறியிருக்கிறார்! அழகான உதாரணங்கள், யாருமே சொல்ல முடியாத உபமானங்கள், எவருமே எடுத்துக்காட்ட முடியாத சான்றுகள் இவற்றால் விளக்கி இருக்கிறார்!

பெரியாரை வாதிட்டு எவருமே வெல்ல முடியாது! பெரியாரை வாதத்தால் வெல்வதற்கு பெரியார்தான் வரவேண்டும்! ஆனால் பெரியார் வாதத் திறமையால் உண்மையை, நேர்மையை, நியாயத்தை அழிப்பது, கொலை செய்வது நேர்மையல்ல!

இப்போது, திராவிட நாடு வேண்டாம் என்பதற்கு நல்லசான்றுகளுடன் விளக்கிப் பேசி இருக்கிறார்!

இதே பெரியார் அப்போது திராவிட நாடு வேண்டுமென்பதற்கு அசைக்க முடியாத சான்றுகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்!

பெரியாரைப் பார்த்து—'தமிழ் மக்களை திராவிடர்கள் என்று அழைக்கிறீர்கள் இது சரியா?'' என்று எதிரிகள் கேட்டால்—அப்படித்தான் அழைப்பேன், அப்படி அழைத்தால்தான் தமிழ் மக்கள் வாழமுடியும்—நாம், தமிழர்கள் என்று சொன்னால் நம்மோடு ஆரியப் பாப்பானும் 'நானும் தமிழன்தான்' என்று கூறிக்கொண்டு வந்து விடுவான்! அவன் நம்மோடு வந்து சேர்ந்தால் நம் வாழ்வு குலைந்துவிடும் — திராவிடர்கள் என்று சொன்னால் ஒரு பார்ப்பான்கூட வரமாட்டான்'' என்று கூறினார்! அந்தப் பெரியார்தான் திராவிட நாடு தற்கொலைக்கொப்பானது என்று கூறுகிறார்!

காங்கிரஸ்காரர்கள், பெரியாரைப் பார்த்து—'தெலுங்கர்கள் ஆதரிக்கவில்லை, கன்னடியர் ஒன்று சேரவில்லை, மலையாளிகள் ஒத்துவரவில்லை நீங்கள்மட்டும் எப்படி திராவிட நாடு அமைப்பீர்கள்' என்று கேட்டால் பெரியார் வெடுக்கென பதில் சொல்வார்! எல்லோரும் ஆச்சரியத்தால் மூக்கில் விரலை வைப்பர்! பர்மா பிரிந்தபிறகும், பாகிஸ்தான் தனியே போன பின்பும் 'நீங்கள் இந்தியாவை இந்தியா என்றுதான் அழைக்கிறீர்கள்! அதைப்போல மலையாளிகள் போனாலும், தெலுங்கர் ஒழிந்தாலும், கன்னடியர் முடியாது என்று சொன்னாலும் தமிழ் நாட்டை மட்டுமாவது திராவிட நாடு என்று சொல்லுவேன்—தஞ்சை மாவட்டம் கிடைத்தால்கூட அதையும் திராவிட நாடு என்று கூறுவேன்'' என்று பதில் சொல்லுவார்! எல்லோரும் வியப்படைவார்கள்! 'பெரியார் பெரியார்தான்' என்று புகழ்வார்கள்!

அந்தப் பெரியார்தான் இன்று—'மலையாளி பிரிந்துவிட்டான், தெலுங்கன் ஓடிவிட்டான், கன்னடியன் கேட்கவில்லை நாம் எப்படி திராவிட நாடு அமைப்பது'' என்று கேட்கிறார்!

அல்லும் பகலும் பாடுபட்ட பெரியாருக்கு இந்த நிலை வந்ததேன் என்றுதான் புரியவில்லை!

பெரியார் இராமசாமி கேட்பார் பேச்சைக் கேட்டு இந்த தற்கொலையை செய்து கொள்வார் என்று நாங்கள் கனவுகூட காணவில்லை!



பெரியார் ''திராவிட நாடு வேண்டாம்'' என்று சொன்னாலும், பெரியார் தன் கொள்கையை அழித்தொழிக்க முன் வந்தாலும் அது அழியாது, ஒழியாது!

பெரியார் வளர்த்துவிட்ட அறிஞர் அண்ணா, அறிஞர் அண்ணா தோற்றுவித்த திராவிட முன்னேற்றக் கழகம் பெரியாரின் கொள்கையைப் பாது காக்கும், திராவிடத்தைப் பெற்று நல்லாட்சியை மலர வைக்கும்! இதில் துளியும் சந்தேகம் வேண்டாம்!

பெரியாரே! திராவிடத்தின் தனிப் பெருந் தலைவரே! எங்கள் தந்தையே! நீங்கள் வளர்த்துவிட்ட இலட்சிய வீரர்களை கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்! நீங்கள் பெற்றுத் தந்த இலட்சியத் திருவிளக்குகள் இருக்கும்போது மாற்றானோடு கொஞ்சுவது ஏன்? பச்சோந்திகளோடு கூடி மகிழ்வதேன்? சிந்தனை சிற்பியே! சிந்தித்துப் பாருங்கள்! நாட்டுக்காகச் சிந்தித்துப் பாருங்கள்! நாட்டு மக்களுக்காக சிந்தித்துப் பாருங்கள்! பெற்ற குழந்தையை உயிரோடு புதைக்காதீர்கள் திராவிடம் பெற பாடுபடுங்கள்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடி சுண்டல் கடலையை வாங்கித் தின்றுவிட்டு சத்திரத்து சாமியாரைப்போல் திண்ணையில் படுத்துத் தூங்க வேண்டியதுதான்!

இந்தநிலையை காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்தத்தான் வெள்ளைக்காரனை விரட்டியடித்தார்கள் போலும்!

வெள்ளைக்காரன் எத்தனை நன்மை செய்திருந்தாலும் அவன் இந்த நாட்டை ஆள்வது முறையல்லதான்! வெளியேற வேண்டியதுதான்! எந்த நாடும் ஒரு அந்நியனுக்கு அடிமைப்பட்டுக்கிடப்பது கேவலம்தான், இழிநிலைதான்!

ஆனால், காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரனை விரட்டியடித்தது அந்நியன் என்ற காரணத்திற்காக அல்ல என்பது இந்த பன்னிரண்டு ஆண்டுகள் நமக்கு எடுத்துத் தெள்ளத் தெளிய விளக்கி விட்டன!

வெள்ளைக்காரனைப்போல் கவர்னர் வேலை பார்க்கவும், அவன் வாங்கியதுபோல் பத்து இலட்சம், பதினைந்து இலட்சம் என்று சம்பளம் வாங்கவும்தான் வெள்ளைக்காரனை விரட்டியடித்திருக்கிறார்கள்!

'வெள்ளைக்காரன் வேற்றான்' என்று சொன்னது மக்களை ஏமாற்றத்தான்!

இவர்கள் சுதந்திரம்கேட்டது, சுதந்திரம் வாங்கியது பதவி! பதவி! பதவி! என்பதைத் தவிர மற்ற காரணங்களெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை!

நாட்டையும், நாட்டு மக்களையும், நாட்டு மக்களின் அறிவையும், நாட்டுமக்களின் மானத்தையும் பாழ்படுத்திய இந்த பன்னிரெண்டு ஆண்டுகளை மனித உலகம் இருக்கும்வரை மறக்க முடியாது!

பைந்தமிழா! ஆண்டுகள் பன்னிரெண்டு பாழாய் போய்விட்டது! இனியேனும் காலத்தைப் பயன்படுத்திக் கொள்!

மனிதன் செய்ய வேண்டியது மலையத்தனை இருக்கிறது! ஆனால் அவனுக்கு காலம்தான் இல்லை! ஆயுள்தான் இல்லை! இருக்கிற காலத்தை நாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்! இதுதான் ஆகஸ்ட்டு 15 நமக்குப் போதிக்கும் பாடம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை
அலுவலகம் 1-35 வாணியர் தெரு. சென்னை-14